அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். சீக்கிரமாக விசாரணை நடத்தி, உடனடியாக முடிவு எடுப்பதற்கு ஏதாவது வழி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்காக ஸ்பெஷல் ஸ்டாஃப் போட்டிருக்கிறார்கள். விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் விசாரணை நடத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், 15-8-1966-க்குள் ரிப்ளை தரவேண்டும் என்று அவர்களுக்கு 'ஷோ காஸ்' நோட்டீசும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இந்த சொஸைட்டியின்மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன, அதனுடைய நிர்வாகத்தினர் யார் என்று அறியலாமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அந்தத் தகவல் இங்கு இல்லை. ஆனால் 13 சொஸைட்டிகளுக்கும் 'ஷோ-காஸ்' நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இதிலிருந்து நீக்கக் கூடாது என்று கேட்கப்பட்டிருக்கிறது. மற்ற விவரங்கள் வேண்டுமென்றால் தனியாகத்தான் கேள்வி போடவேண்டும்.

மத்தியக் கூட்டுறவுப் பாங்கியில் குளிர்ப்பதனச் சாதனம்

* 172 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கூட்டுறவு அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் உள்ள மத்திய கூட்டுறவுப் பாங்கியில் குளு குளு சாதனம் (air conditioning apparatus) அமைத்ததற்கு அரசாங்க அனுமதி பெறப்பட்டுள்ளதா ?

(இ) மற்ற மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுப் பாங்கிகளிலும் இம்மாதிரிச் சாதனங்கள் அமைக்க அனுமதி பெறக் கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) & (இ) இல்லை. தங்களுடைய கட்டடங்களில் குளிர்ப்பதனச் சாதனங்களை (air-conditioning units) அமைப்பதற்குச் செலவு செய்ய மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்குகள் அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை.

Multimetal ore deposits

* 173 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any deposits of Gypsum have been discovered in the taluks of Pollachi, Palladam and Udumalpet of Coimbatore district; and

(*b*) if so, the estimated extent of the said deposits?

[6th August 1966

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) & (இ) ஆம். கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, பல்லடம் வட்டங்களில் களிக்கல் (Gypsum) படிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பொள்ளாச்சி, பல்லடம் சாலைக்குக் கிழக்கேயுள்ள பகுதிகளில் இக்களிக்கல் படிவங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. அடுத்துள்ள பல்லடம், உடுமலைப்பேட்டை வட்டங்களிலும் இக்களிக்கல் படிவங்கள் ஆங்காங்கே திட்டு திட்டாகக் காணப்படுகின்றன. பல்லடம் பகுதியில் ஏறக்குறைய 56,000 டன் களிக்கல் படிவங்கள் கிடைக்கும் எனவும், பொள்ளாச்சி வட்டத்தில் ஏறக்குறைய 28,000 டன் களிக்கல் படிவங்கள் இருப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் கிடைக்கும் களிக்கல் கொண்டு போர்ட்லண்டு சிமிட்டி, உரங்கள், பாரிஸ் உறை மாவு (Plaster of Paris) போன்ற பொருள்களைத் தயாரிக்கலாம்.

திரு. வை. சங்கரன்: இதைப் பயன்படுத்தி ஏதாவது சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா? அப்படி என்றால், அதன் கபாசிட்டி என்ன இருக்கும்?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: இப்போதுதான் ப்ரிலிமினரி வேலைகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. பிறகுதான் இதைப்பற்றியெல்லாம் யோசிக்க வேண்டும்.

* 174 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether and multimetal ore deposits including iron, nickel, and copper have been found, in Mangamalai area in Kanyakumari district; and

(b) if so, whether any survey has been made to estimate the quantity of the respective metals available thereof?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) & (இ) ஆம். கன்னியாகுமரி மாவட்டத்தில் அருமநல்லூர் அருகில் மாங்காமலைப் பகுதியில் சல்பைடு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, 1965 ஜனவரி-மே மாதங்களில் இந்தியப் புவியியல் ஆராய்ச்சியினரால் விரிவாகப் புலனாய்வு செய்யப்பட்டது. இக் கனி வகைகள் இங்கு இருப்பதாக இப்புலனாய்வின்மூலம் தெரிய வந்தது. இன்னும் கனிமூலப் பொருளின் தன்மை, அது எவ்வளவு ஆழம் தொடர்ந்து உள்ளது ஆகியவற்றை ஆராய்ந்தறியும் வேலையை மாநிலப் புவியியல் ஆராய்ச்சிக் கிளை மேற்கொண்டுள்ளது. வேலை நடந்தேறி வருகிறது.

திரு. வை. சங்கரன்: சார், சமீபத்திலே மாமண்டூர் பகுதியில் இந்தமாதிரி இருந்தபோது ஜப்பானியரைக் கொண்டு ஆராய்ந்த மாதிரி அவர்களைக்கொண்டே அதையும் ஆராய ஏற்பாடு செய்யப்படுமா?